பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

17 09 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்தியப்பிரதேசத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மின்னணு சாதனங்களுக்கான சிப்புகளை, உள்நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரிக்கும் திறனை இந்தியா பெற்றிருப்பதாக, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. பொதுமக்களின் அடிப்படை தேவை குறித்த கோரிக்கைகளை தாமதமின்றி நிறைவேற்றுமாறு அதிகாரிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக ஆட்சியை அகற்ற அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், அம்மாநிலத்தில் உள்ள Dhar பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் 8வது தேசிய ஊட்டச்சத்து மாத விழாவை தாம் தொடங்கி வைக்க இருப்பதாக கூறியுள்ளார்.

ஆரோக்கியமான பெண்கள் - வலுவான குடும்பம் என்ற திட்டத்தையும், பிரதமரின் மித்ரா பூங்காவையும் தொடங்கி வைக்க இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிரதமரின் மாத்ரு வந்தனா திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கான நிதியுதவியையும் வழங்குவதுடன், மகப்பேறு மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான, Suman Sakhi என்ற Chatboat-ஐயும் தொடங்கி வைக்க இருப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மின்னணு சாதனங்களுக்குத் தேவையான சிப்புகளை, உள்நாட்டிலேயே வடிவமைத்துத் தயாரிப்பதற்கான வசதிகளை இந்தியா பெற்றிருப்பதாக, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில், செமி கண்டக்டர் உற்பத்தி மற்றும் பயிற்சி மையத்தைத் தொடங்கிவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் செமி கண்டக்டர் இயக்கம், 278 பல்கலைகழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறினார்.

இதன் காரணமாக, மாணவர்களே 28 சிப்புகளை உள்நாட்டிலேயே வடிவமைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த இயக்கத்தின் மூலம், இதுவரை 10 செமிகண்டக்டர் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், இதில் ஒரு தொழிற்சாலை, உற்பத்தியை தொடங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

செமி கண்டக்டர் இயக்கத்தின் இரண்டாம் கட்டத்தில், சிப்புகளைத் தயாரிக்கத் தேவையான சாதனங்கள் மற்றும் பொருட்களை, உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தப்படும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<>>>>

தொழிலாளர்களின் திறமை மற்றும் அவர்களது நலனை மேம்படுத்துவதற்கான கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க அரசு உறுதி பூண்டிருப்பதாக, மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மத்திய அரசுக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், இந்திய இளைஞர்கள், உலகளாவிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்றார்.

இந்தியத் தொழிலாளர்களை, சர்வதேச தொழிலாளர் சந்தையுடன் இணைப்பதற்கும் இந்த ஒப்பந்தம் வகை செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய பட்டதாரிகள் உலக அளவில் போட்டியிடுவதற்கான திறமையை மேம்படுத்தவும், எதிர்காலத்திற்கேற்ற கல்வி மற்றும் திறன் பயிற்சி அளிப்பதில், இந்தியாவை உலகின் முன்னணி மையமாக மாற்றுவதற்கும் இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடிநீர், சாலை பராமரிப்பு, மின்விளக்கு போன்ற பொதுமக்களின் அடிப்படை தேவை குறித்த கோரிக்கைகளை தாமதமின்றி நிறைவேற்றுமாறு அதிகாரிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். மாநில அரசால் நிறைவேற்றப்படும் சிறப்புத் திட்டங்களின் செயல்பாடு குறித்து சேலத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மூலம் பெறப்படும் மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காணுமாறு கேட்டுக்கொண்டார். இதேபோன்று மகளிர் உரிமைத் தொகை தொடர்பான மனுக்களை விரைவாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதுடன், அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு உபகரணங்கள் கேட்பவர்களுக்கு அதனை வழங்குமாறும் துணை முதலமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

சென்னை நகரில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணிகள் காரணமாக 20 சென்டி மீட்டர் வரை மழை பெய்தால்கூட அதனை எதிர்கொள்ள வகையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டி பகுதியில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருவதாக கூறினார்.

பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நாளை மறுநாள் நடைபெற உள்ளதாகவும் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பிறந்தநாளை ஒட்டி பிஜேபி சார்பில் தமிழகத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திர் தெரிவித்துள்ளார்.

சென்னை அருகே நேற்று நடைபெற்ற மாநில பிஜேபி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து மாவட்டங்களிலும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட உள்ளதாக கூறினார்.

கூட்டணி தொடர்பான கேள்விகளுக்கு பதிலளித்த திரு. நயினார் நாகேந்திரன், தமிழகத்தில் திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற எம்.ஜி.ஆரின் எண்ணத்தை நிறைவேற்ற அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

விவசாயத்திற்கு பயன்படும் டிராக்டர், டில்லர், களையெடுக்கும் எந்திரம் மற்றும் கதிரடிக்கும் எந்திரம் போற்றவற்றின் மீதான வரி 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் உதவிகரமாக இருக்கும் என்று கிருஷ்ணகிரியைச் சேர்ந்த வேளாண் கருவிகள் விற்பனையாளர் திரு. துரை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஆஃப்கனிஸ்தானின் பதாக்ஷன் பகுதியில் போதைப்பொருள் தயாரிப்பில் ஈடுபட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

------------

நமீபியா தலைநகர் Windhoek-ல் கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஜீரோ எமிஷன் வாரம் கடைபிடிக்கப்படுகிறது.

------------

பப்புவா நியூகினியா சென்றுள்ள வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா அந்நாட்டு தொழில் துறையினருடன் கலந்துரையாடினார்.

------------

சென்னை ஷெனாய் நகர் விளையாட்டுத் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு ஆய்வு செய்தார்.

------------

சென்னை எழும்பூர்-மங்களூரு இடையேயான எக்ஸ்பிரஸ் ரயில் நாளை மறுநாள் முதல் வழக்கம்போல் எழும்பூரில் இருந்து புறப்பட்டுச் செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின்கீழ் சமுதாய மேலாண்மை பயிற்சி மைய பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திரு. பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

------------

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை மீறி சாலைகளில் அமைக்கப்படும் கொடிக் கம்பங்களை அப்புறப்படுத்தி சம்பந்தப்பட்ட நபர்கள் மீது காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் தெரிவித்துள்ளார்.

------------

விருதுநகர் நான்கு வழிச் சாலையில் கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோயிலில் கிருஷ்ணஜெயந்தியின் நிறைவாக உரியடி திருவிழா மற்றும் வழுக்கு மரம் ஏறுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

------------

திருப்பதி திருக்குடை ஊர்வலத்தை முன்னிட்டு சென்னையில் வால்டாக்ஸ் சாலை, யானைக்கவுனி, சூளை நெடுஞ்சாலை, ஓட்டேரி சந்திப்பு உள்ளிட்ட பகுதிகளில் இன்று போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

------------

காவல்துறை உயர் அதிகாரிகளுக்கான துப்பாக்கி சுடும் போட்டியின் ஒட்டுமொத் பிரிவில் திருநெல்வேலி சரக டி.ஐ.ஜி. திரு. சந்தோஷ் ஹடிமணி முதலிடம் பெற்றார்.

ரிவால்வர் பிரிவில் திருநெல்வேலி சைபர் குற்றப்பிரிவு கூடுதல் கண்காணிப்பாளர் முருகன் முதல் இடத்தைப் பிடித்தார்.

பிஸ்டல் மற்றும் INSAS ஆகிய இரு பிரிவிலும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஆல்பர்ட் ஜான் 3வது இடத்தைப் பிடித்தார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

உலக தடகள சாம்பியன் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இன்று பங்கேற்கிறார்.

முன்னதாக டோக்கியோவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்திய வீரர் சர்வேஷ் குஷாரே 6ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அவர் 2 புள்ளி இரண்டு எட்டு மீட்டர் தொலைவை தாண்டினார்.

-------------

17 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்திய ஆடவர் அணி மாலத்தீவு அணியை வென்றது.

கொழும்பு நகரில் நேற்று நடைபெற்ற தொடக்க ஆட்டத்தில் இந்தியா 6-0 என்ற கோல் கணக்கில் மாலத்தீவு அணியை வீழ்த்தியது.

-------------

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று சண்டிகரில் பிற்பகல் மணி 1.30க்கு நடைபெறுகிறது.

<<<<The End>>>>